# உடுநுவர பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான உடுநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) ஐந்து கருத்திட்டங்களின் கீழ் சம்பளங்கள் மற்றும் படிகளுக்காக செலவுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் அதற்கான கிடைத்த சம்பள மிளளிப்பு தொகையை கருத்திட்டம் ஒன்றின் கீழ் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 550,983 இற்கான பலவின வைப்பு தொகைக்கு பதிலாக ரூபா 633,677 தொகை திருப்பி செலுத்தியமையால் ரூபா 72,694 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக்கு கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொது வழங்கள் கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,026,210 இற்கான தொகையினை தவறான முறையில் நிர்மான வேலை கடன் கொடுத்தோர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதை திருத்துவதற்காக 54 ஆம் இலக்க நாட் குறிப்பின் மூலம் பொது வழங்கள் கடன் கொடுத்தோருக்கு வரவு வைத்து, நிர்மாண வேலை கடன் கொடுத்தோருக்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதனைத் திரண்ட நிதியத்திற்கு

செலவு வைக்கப்பட்டமையால் அதே தொகையால் திரண்ட நிதியம் மற்றும் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 302,846 இற்கான 328 நூலகப் புத்தகங்களின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) கெலிஓய இலங்கை வங்கியின் இலக்கம் 4070181 கொண்ட வங்கிக் கணக்கில் ரூபா 1,000 இற்கான போலி நோட்டுகளின் பெறுமதியை சரி செய்யாமல் தொடர்ந்து வங்கி இணக்க கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம், மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 155,115,865 ஆக காணப்பட்டதுடன், பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 142,784,218 ஆக காணப்பட்டமையால், ரூபா 12,331,647 இற்கான இணங்கப்படாமை ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 36,223,792 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,631,545 ஆகும். 2014 ஜுலை 11 திகதியில் உள்ளவாறு ரூபா 19,544,298 தொகையொன்று மேலும் அறவிடப்படவேண்டியிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,946,029 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,403,451 ஆகக் காணப்பட்டது. 2014 ஜுலை 11 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 18,670,841 தொகையொன்று மேலும் செலுத்த வேண்டியிருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால், கூட்டுத் தொகை ரூபா 9,718,555 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

2. நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதிய முடிவடையும் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞசிய வருமானம் ரூபா 6,751,738 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 571,361 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 7,323,099 இற்கான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்புத் தொகையாக ரூபா 20,922,449 தொகை கிடைத்திருந்த போதும் சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 25,756,180 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையின் வருமானத்தில் ரூபா 4,833,731 தொகையொன்றினை ஊழியர்களின் சமபளம் செலுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. இத்தொகை சம்பள மீளளிப்பு தொகை தவிர சபையின் மீண்டுவரும் வருமானத்தின் நூற்றிற்கு 11 ஆகும்.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்களை காட்டும் விகிதாசாரம் 1.25:1 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் விகிதாசாரம் 1.17:1 உச்ச மட்டத்தில் காணப்படவில்லை. மேலும், ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்கள் நூற்றிற்கு 63 எனப்படும் 36 மில்லியன் நிர்மாண வேலைகள் மற்றும் பலவின கடன் பட்டோர் ஆக காணப்பட்டதுடன் மொத்த நடைமுறை பொறுப்புகளின் நூற்றிற்கு 96 எனப்படும் ரூபா 43 மில்லியன் தொகையான நிர்மாண வேலைகள் மற்றும் பலவின கடன் கொடுத்தோர் அடங்கியிருந்தது.

2.4 வருமான நிருவாகம்

-------------------------------

2.4.1 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

---------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 20,708,638 ஆக காணப்பட்டது.

2.4.2 நிதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 8,333,936 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்தது. அவற்றில் 2014 அக்டோபர் 10 திகதியில் உள்ளவாறு ரூபா 5,740,796 இற்கான மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

கணக்காய்விற்கு சமர்பித்திருந்த விபரங்களின் பிரகாரம் பிரதேச சபையினால் 03 செயற்திட்டங்களில் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 12,415,808 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும், ஏனைய வருமானத்தின் மூலம் அகக் குறிக்கோளுக்காக ரூபா 2,403,706 கிடைத்திருந்தது. அப் பிரிவுகளில் இருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை அதிகரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------

பல வருட காலமாக சபையின் சொத்து ஒன்றென கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 516,437 இற்கான இருப்புச் சேதங்கள் தொடர்பாக பொறுப்பு வாந்த அலுவளர்களிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------------

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

---------------------------------

மீளாய்வாண்டிற்காக கூட்டிணைப்புத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொள்வனவுத் திட்டம்

--------------------------------

மீளாய்வாண்டிற்காக ரூபா 43,859,829 இற்கான மூலதன செலவு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

----------------------------------------------------------------

சபையில் மீளாய்வாணடின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைந்திருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

----------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு மற்றும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட உள்ளவாறான பெறமதி உடன் ஒப்பீடு செய்யும் போது, 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 19 முதல் நூற்றிற்கு 63 உம் மற்றும் 04 செலவு விடயங்களில் நூற்றிற்கு 22 முதல் நூற்றிற்கு 44 வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 05 வருமான தலைப்பைச் சேர்ந்த 07 துணை விடயங்களுக்காக ரூபா 121,252,000 இற்கான வருமானம் ஒன்று மதிப்பீடு செய்திருந்த போதும் வருமானம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

5 முறைகள் மற்றும் கட்டுபாடுகள்

---------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன் கொடுத்தோர், கடன் பட்டோர் கட்டுப்பாடு